அ. பாரதிராஜா. முதுகலை விலங்கியல் ஆசிரியர்.
தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி, தேவகோட்டை. சிவகங்கை மாவட்டம்

# மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) அரசு பொதுத்தேர்வு – மார்ச் – 2025

## உயிரி – விலங்கியல் விடைக்குறிப்பு – (FINAL KEY)

PART - I 8 x 1 = 8

Note: (1) Answer all the questions.
(2) Choose the most appropriate answer from the given four alternatives and write the option code and the corresponding answer.

| Q. NO | A - TYPE | MARK | Q. NO | B - TYPE | MARK |
|---|---|---|---|---|---|
| 1 | இ) அலங்கார வகை – சில்கி | 1 | 1 | அ) கார்பமினோ ஹீமோகுளோபின் | 1 |
| 2 | அ) நரம்புத் தூண்டல் கடத்தலுக்ககாக ஆற்றல் வெளிப்பாடு அதிகரித்தல் | 1 | 2 | **வினா எண் எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்** | 1 |
| 3 | அ) நுமாடிக் எலும்பு | 1 | 3 | அ) இரத்த நுண் நாளங்களின் மொத்தப் பரப்பு நுண் தமனிகளின் மொத்த பரப்பைவிடப் பெரியது. | 1 |
| 4 | ஆ) எரியோலார் திசு | 1 | 4 | அ) நரம்புத் தூண்டல் கடத்தலுக்ககாக ஆற்றல் வெளிப்பாடு அதிகரித்தல் | 1 |
| 5 | அ) கார்பமினோ ஹீமோகுளோபின் | 1 | 5 | இ) அலங்கார வகை – சில்கி | 1 |
| 6 | **வினா எண் எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்** | 1 | 6 | ஆ) எரியோலார் திசு | 1 |
| 7 | அ) இரத்த நுண் நாளங்களின் மொத்தப் பரப்பு நுண் தமனிகளின் மொத்த பரப்பைவிடப் பெரியது. | 1 | 7 | அ) ஆண்டி டை யூரிடிக் ஹார்மோன் | 1 |
| 8 | அ) ஆண்டி டை யூரிடிக் ஹார்மோன் | 1 | 8 | அ) நுமாடிக் எலும்பு | 1 |

பகுதி – II

ஏதேனும் நன்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 4 x 2 = 8

| | | |
|---|---|---|
| 9 | **சார்லஸ் டார்வின் பங்கு:**<br>1. 1859ல் சார்லஸ் டார்வின் 'சிற்றினங்களின் தோற்றம்' என்ற நூலில்<br>2. இயற்கை தேர்வின் மூலம் சிற்றினங்களுக்கு இடையேயான பரிணாமத் தொடர்புகளை விளக்கியுள்ளளார். | 1<br>1<br>2 Mark |
| 10 | **எலும்புமீன்களின் பொதுப் பண்புகள்:** **ஏதேனும் இரண்டு மட்டும்** (2 x 1 = 2)<br>1. **வாழிடம்:** நன்னீர் மற்றும் கடல் நீரில் வாழும் மீன்கள்.<br>2. **உடல் அமைப்பு:** கதிர் வடிவ உடலைய உடையவை.<br>3. **அகச்சட்டம்:** எலும்பினால் ஆனவை.<br>4. **செதில்:** கேனாய்டு, சைக்ளாய்டு அல்லது டீனாய்டு.<br>5. **சுவாச உறுப்பு:** செவுள் மூடிகளால் மூடப்பட்ட நான்கு இணை இழை வடிவ செவுள்கள்.<br>6. **காற்றுப்பைகள்:** உணவுக்குழலுடன் இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்படாத காற்றுப்பைகள் காணப்படுகின்றன. | 2 MARK |


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | 7. இப்பைகள், காற்றுப் பரிமாற்றத்திற்கும் (நுரையீரல் மீன்கள்), திருக்கை மீன்களில் மிதவைத் தன்மையைக் கொடுக்கவும் பயன்படுகின்றன.<br>8. **இதயம்:** வயிற்றுப் புறத்தில் அமைந்த ஈரறைகளைக் கொண்ட இதயம்.<br>9. **கழிவு நீக்க உறுப்பு:** மீசோநெஃப்ரிக் வகை சிறுநீரகம்.<br>10. பக்ககோட்டு உணர் உறுப்பு மண்டலத்தினையும் இவை பெற்றுள்ளன.<br>11. **கழிவுப் பொருள்:** அமோனியா<br>12. ஆண் பெண் உயிரிகள் தனித் தனியானவை.<br>13. புறக்கருவுறுதல்<br>14. முட்டையிடுவன. | |
| 11 | **மண்புழுவின் சுவாசம்:**<br>1. உடற்சுவரின் வழியாகவே சுவாசம் நடைபெறுகிறது.<br>**(அல்லது)**<br>2. தோலின் புறப்பரப்பு, அதிக இரத்த நாளங்களைக் கொண்டிருப்பதால் காற்று பரிமாற்றம் எளிதில் நடைபெறுகிறது.<br>**(அல்லது)**<br>3. வெளிக் காற்றிலுள்ளஆக்சிஜன் தோலினை ஊடுருவிச் சென்று இரத்தத்ததை அடைகிறது. அதைப்போலவே கார்பன் டைஆக்ஸைடு இரத்தத்திலிருந்து வெளியேறுகிறது.<br>**(அல்லது)**<br>4. காற்று பரிமாற்றம் நடைபெற ஏதுவாகக் கோழைமற்றும், உடற்குழி திரவத்ததால் தோல் ஈரப்பதத்துடன் வைக்கப்பட்டுள்ளது. | 2 MARK |
| 12 | **உயிர்ப்புத்திறன் (VC):**<br>1. அதிகபட்சமான ஒரு உட்சுவாசத்திற்குப் பிறகு வெளியேற்றப்படும் காற்றின் அதிகப் பட்ச கொள்ளளவு.<br>**(அல்லது)**<br>2. காற்றறை அதிகபட்சமாக உள்ளிழுத்துப் பின் அதிகபட்சமாக வெளியேற்றுவது உயிர்ப்புத்திறன் ஆகும்.<br>**(அல்லது)**<br>3. உயிர்ப்புத்திறன் = வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளவு + மூச்சுக் காற்று அளவு + உட்சுவாச சேமிப்புக் கொள்ளளவு<br>**(அல்லது)**<br>4. (VC = ERV+TV+IRV) | 2<br>2 MARK |
| 13 | 1. நெப்ரானின் அண்மமை சுருள் நுண்குழலில் அல்லது PCT ல் மீண்டும் உருஞ்சப்படுதல் அதிகமாக நடைபெறுகிறது. | 2<br>2 Mark |
| 14 | **ஸ்டீராய்டு ஹார்மோன்கள்:** **ஏதேனும் நான்கு மட்டும்** (4 x ½ = 2)<br>1. கார்டிசோல்,<br>2. ஆல்டோஸ்டீரோன்,<br>3. டெஸ்டோஸ்டீரோன்,<br>4. ஈஸ்டட்ரரோஜன்,<br>5. புரோஜெஸ்டீரோன்.<br>6. FSH | 2 MARK |


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| பகுதி – III<br>ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண் 19 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும். 3 X 3 = 9 | | |
|---|---|---|
| 15 | **மீன்களில் காணப்படும் காற்றுப்பைகளின் பயன்கள்:**<br>1. காற்றுப் பரிமாற்றத்திற்கும் – நுரையீரல் மீன்கள்.<br>2. மிதவைத் தன்மமையைக் கொடுக்க – திருக்ககைமீன் | 1 ½<br>1 ½<br>3 MARK |
| 16 | **தாவர உண்ணிகளில் குடல் பிதுக்கப்பகுதியும் குடல் வால் பகுதியும் மிகப் பெரியதாக அமைந்துள்ளது.**<br>1. நன்மமை செய்யும் பாக்டீரியாக்கள் செல்லுலோஸ் செரித்தலுக்கு உதவுகின்றன. | 3 MARK |
| 17 | **பாட்டின் பொருளாதார முக்கியத்துவம்:** ஏதேனும் மூன்று (3 x 1 = 3)<br>1. பட்டு நூல்கள் பட்டுத் துணிகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.<br>2. ஆடை அலங்ககார பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.<br>3. தொழிற்சாலைகளிலும் இராணுவத் துறையிலும் பட்டு பயன்படுத்தப்படுகிறது.<br>4. மீன்பிடி வலைகள்,<br>5. பாராசூட்டுகள்,<br>6. கார்ட்ரிட்ஜ் பைகள்,<br>7. தொலை தொடர்பு கம்பிகளின் மேலுறைகள் மற்றும் கம்பியில்லலா தொலைபேசிக் கருவிகள்,<br>8. பந்தய காரின் டயர்கள்,<br>9. வடிகட்டி இழைகள், தயாரிக்கப் பயன்படுகின்றன.<br>10. மருத்துவத் துறையில் காயக்கட்டுத் துணிகள் மற்றும் தையலிடுவதற்கும் பட்டு பயன்படுகிறது. | 3 MARK |
| 18 | **அட்ரீனலின் பணிகள்:** ஏதேனும் மூன்று மட்டும் (3 x 1 = 3)<br>1. அட்ரினல் மெடுல்லா, பறத்தல், பயம், சண்டை ஆகியவற்றோடு தொடர்புடைய அட்ரினலின் மற்றும் நார் அட்ரினலின் ஹார்மோன்களைச் சுரக்கின்றது.<br>2. இது 3F ஹார்மோன் (Flight, Fight & Fright hormone) என்று அழைக்கப்படுகிறது.<br>3. கல்லீரலில் உள்ளகிளைக்கோஜனை சிதைத்து குளுக்கோஸாக மாற்றுகிறது.<br>4. கொழுப்பை, கொழுப்பு அமிலங்களாகச் சிதைத்து வெளியேற்றுதலையும் அட்ரினலின் தூண்டுகின்றது.<br>5. நெருக்கடி காலத்தில் இதயத் துடிப்பு வீதம் மற்றும் இரத்த அழுத்தத்தை அட்ரினலின் உயர்த்துகின்றது.<br>6. தோலின் மென்தசைகள் மற்றும் உள்ளுறுப்புத் தமனிகளைத் தூண்டி இரத்த ஓட்டத்தைக் குறைக்கின்றது.<br>7. எலும்புத் தசைகளுக்கு இரத்த ஓட்டத்தைஅதிகரிப்பதன் மூலம் எலும்புத்தசை, இதயத்தசை மற்றும் நரம்புத் திசுக்களின் வளர்சிதைமாற்ற வீதத்தையும் உயர்த்துகின்றது. | 3 MARK |

www.Padasalai.Net


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**19** — **திரவ மூட்டுகளின் வகைகள்** — **ஏதேனும் மூன்று மட்டும் (3 x 1 = 3)** — **3 MARK**

| | |
|---|---|
| முளை அச்சு மூட்டு (அல்லது) சுழலச்சு மூட்டு | முதல் கழுத்து முள்ளளெலும்பு மற்றும் அச்சு செலும்புக்கிடையிலான மூட்டு |
| நழுவு மூட்டு | மணிக்கட்டு எலும்புகளுக்கிடையிலான மூட்டு |
| சேணமூட்டு | முதல் மணிக்கட்டு எலும்பு மற்றும் உள்ளங்கை எலும்பிற்கும் இடையேயான மூட்டு |
| பந்து கிண்ணமூட்டு | தோள்பட்டடை வளையத்திற்கும் மேற்கை எலும்புக்கும் இடையிலான மூட்டு |
| கீல் மூட்டு | முழங்ககால் மூட்டு இணைப்பு |
| கோணமூட்டு | ஆர எலும்புக்கும் மணிக்கட்டு எலும்புக்கும் இடையிலான மூட்டு |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **5 x 2 = 10**

**20 A** **தவளையின் செரிமான மண்டலத்தை படம் வரைந்து பாகங்களை குறி.** — **5 Mark**




**படம் 3 மதிப்பெண்**

**பாகங்கள் 2 மதிப்பெண்**

**OR**

**20. B** **சிதைவடைந்த இரத்தக் குழாயில் நடைபெறும் இரத்த உறைதலை விளக்கும் தொடர் வரைபடம். உள்ளார்ந்த இரத்த உறைதல் நிகழ்வு:** — **5 Mark**

தூண்டல்
↓
திசுச்சேதம்
↓
தசை இழுப்பு இரத்தத்தட்டுகளால் அடைப்பு ஏற்படுதல்
↓
உள்ளார்ந்த உறைதல் செயல்முறை
↓
புரோத்ராம்பினைச் செயல்பட வைக்கும் பொருள் உற்பத்தி
↓
புரோத்ராம்பின் திராம்பின் ஆக மாற்றப்படுதல்
↓
திராம்பின் ஆனது கரையும் ஃபைப்ரினோஜன் மீது நொதியாக செயல்படுதல்
↓
ஃபைப்ரினோஜன் கரையாத ஃபைப்ரின் இழைகளாக மாறுதல்
↓
காயமடைந்த இடத்தில் ஃபைப்ரின் இழைகள் உருவாகி இரத்த செல்களைப் சிக்கவைத்தல் (காயம் அடைபடுதல்)


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

<table>
<tr>
<td>21. A</td>
<td>கண்ணின் ஒளிவிலகல் குறைபாடுகள்:<br>மையோப்பியா– கிட்டப்பார்வை (Myopia)<br>1. பாதிப்படைந்த நபரால் அருகில் உள்ள பொருட்களை தெளிவாகப் பார்க்கமுடியும்.<br>2. தொலைவில் உள்ள பொருட்களை தெளிவாகக் காண முடிவதில்லை.<br>காரணம்:<br>3. கண்கோளம் நீண்டிருத்தல், விழிலென்ஸ் அதிகமாகத் தடிப்புற்றிருத்தல்.<br>4. ஒளிக்கதிர்கள் விழித்திரையின் மஞ்சள்பகுதிக்கு (Fovea) முன்பாகக் குவிக்கப்படுகிறது.<br>5. சரிசெய்தல்: குழிலென்ஸ்<br><br>ஹைப்பர் மெட்ரோப்பியா– தூரப்பார்வை(Hypermetropia)<br>1. இதனால் பாதிப்படைந்தநபரால் தொலைவில் உள்ள பொருள்களைத் தெளிவாகக் காண முடியும்.<br>2. அருகில் உள்ள பொருள்களைத் தெளிவாகக் காண முடியாது.<br>3. கரணம்: கண்கோளம் சுருக்கமடைதல் விழிலென்ஸ் மெலிந்திருத்தல்.<br>4. ஒளிக்கதிர்கள் விழித்திரைக்கும் பின்னால் குவிக்கப்படுகிறது.<br>5. சரிசெய்தல்: குவிலென்ஸ்<br><br></td>
<td>1 ½<br><br>½<br><br>1 ½<br><br>½<br><br>படம்<br>½ + ½<br><br>5 Mark</td>
</tr>
<tr>
<td colspan="3">OR</td>
</tr>
<tr>
<td>21. B</td>
<td>மீன்களின் உணவூட மதிப்பு: (ஏதேனும் ஐந்து மட்டும்) 5 x 1 = 5<br>1. மீன்கள் புரத உணவிற்கான ஆதாரமாகும்<br>2. சார்டைன் (மத்தி), மாக்கெரல் (கானாங்கெழுத்தி), டூனா (சூறை), ஹெர்ரிங் போன்ற மீன் இனங்கள் அதிக அமினோ அமில செறிவைக் கொண்டுள்ளன.<br>3. அமினோ அமிலம்: ஹிஸ்டிடின்.<br>4. மீன்களில் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்துள்ளன.<br>5. தனிமங்கள்: கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்பு, மாங்கனீசு, அயோடின் மற்றும் தாமிரம்.<br>மீன்களில் இருந்து கிடைக்கும் சில உப பொருட்கள்.<br>6. மீன் எண்ணெய்: இதில், வைட்டமின் A மற்றும் D மிகுந்துள்ளது.<br>மீன்மாவு (Fish Meal) அல்லது மீன் தூள்<br>7. மீனின் உடலில் இருந்து எண்ணெய் எடுத்தபிறகு உள்ளகழிவுகளில் இருந்து உருவாக்கும் பொருள் மீன் மாவு ஆகும்.<br>8. பன்றி, பறவைகள் மற்றும் கால்நடைகளுக்கு உணவு தயாரிக்கப்படுகின்றது.<br>இசின்கிளாஸ் (Isinglass)<br>9. ஒயின், பீர், வினிகர் போன்ற பொருட்களை சுத்திகரிக்க பயன்படுகிறது.</td>
<td>5 Mark</td>
</tr>
</table>

**அ. பாரதிராஜா**
M.Sc., M.Ed., M.A., M.Phil., D.O.A
முதுகலை விலங்கியல் ஆசிரியர்,
தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி,
தேவகோட்டை.

www.Padasalai.Net


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com